இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 20.03.2026

பழனிசாமி ஆட்சியின் பழைய நிலவரங்கள் - 2

★ 2019 ஆகஸ்ட் 27 - சீர்காழி அருகே எடக்குடி வடபாதி கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகரும் வைத்தீஸ்வரன் கோவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவருமான அஞ்சம்மாள் கைது செய்யப்பட்டார். வைக்கோல் போரில் 47 கேன்களில் 1600 லிட்டர் சாராயத்தை அவர் வைத்திருந்தார்.

★ 2020 ஏப்ரல் 14 - யூடியூப் பார்த்து கள்ளச்சாராயம் காய்ச்சிய நபர்கள் என்ற வீடியோவை பாலிமர் சேனல் வெளியிட்டது.

★ 2020 ஜூன் 26 - வேலூர் மாவட்டம் பென்னாத்தூர் அருகே கள்ளச்சாராயக் கடத்தல் பாதையை அடைத்தவரை நாட்டுத் துப்பாக்கியால் சுட்ட 3 பேர் என்ற செய்தியை தந்தி டிவி வெளியிட்டது.

★ 2020 ஜூலை 28 - மயிலாடுதுறையில் பாண்டி ஐஸ் என்ற பெயரில் கள்ளச்சாராயம் விற்றதாக ஜெயா ப்ளஸ் செய்தி வெளியிட்டது.

★ 2021 ஜூன் 26 - ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் கள்ளச்சாராய ஊறல் போட்டு வைத்திருந்த அ.தி.மு.க. பிரமுகர் நேரு என்பவர் கைது செய்யப்பட்டார்.

★ 2021 ஜூலை 27 - கோவையில் கள்ளச்சாராயம் காய்ச்சிய அ.தி.மு.க. பிரமுகர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 150 லிட்டர் சாராய ஊறல், 4 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டது. இவை அனைத்தும் சமூக ஊடகங்களில் இன்னமும் இருக்கும் செய்திகள் ஆகும்.

போதைப்பொருட்கள் அதிகமாகிவிட்டன என்று பொய் சொல்லி போராட்டம் நடத்தி வருகிறார் பழனிசாமி. அவரது ஆட்சிக் காலத்தில் குட்கா விற்பனை அவர்களது ஆசிர்வாதத்துடன் நடந்ததை சி.பி.ஐ. வழக்காக தாக்கல் செய்து விசாரணை நடத்தி வருகிறதே!

சென்னையில் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட குட்கா பொருள்களை விற்பனை செய்ய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் குற்றச்சாட்டு எழுந்தது. குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்துகிறது. அப்போது தங்களது வியாபாரத்துக்கு துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள். அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில்.

இது தொடர்பான வழக்கில் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், **"டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது"** என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப்படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. இவை அனைத்தும் பழனிசாமி ஆட்சியில் நடந்தவை ஆகும்.

ரூ.40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்து அமைச்சரான விஜயபாஸ்கர், இரு டி.ஜி.பி.க்கள் பெயர்கள் இருந்தன. ஆனால் லஞ்ச ஒழிப்புத் துறையின் முதல் தகவல் அறிக்கையில் இவர்கள் பெயர் இடம் பெறாத வகையில் பழனிசாமி இவர்களைக் காப்பாற்றினார். சில ஊழியர்களை மாட்டி விட்டு அ.தி.மு.க. அமைச்சர்களை தப்பிக்க வைத்தார் பழனிசாமி.

அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட ஒரு கோப்பு ஒன்றை வருமான வரித்துறை அனுப்பி இருந்தது. அந்த ஆவணங்களையே காணாமல் ஆக்கினார்கள் பழனிசாமி ஆட்சியில். இதுதான் பழனிசாமி, தனது ஆட்சிக் காலத்தில் போதைப் பொருட்களை ஒழித்த லட்சணம் ஆகும்.

★ **எடப்பாடி பழனிசாமிக்கு பாதுகாப்புக்குப் போன போதுதான் சிறப்பு டி.ஜி.பி. ராஜேஸ்தாஸ், பெண் எஸ்.பி.க்கு பாலியல் தொல்லை கொடுத்தார். காவலர்களுக்குமே பாதுகாப்பு இல்லாத ஆட்சியை பழனிசாமி நடத்தினார்.**

★ **சென்னை கேளம்பாக்கம் பகுதியில் சாப்ட்வேர் நிறுவனத்தில் பணியாற்றிய உமா மகேஸ்வரி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.**

★ **சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் சுவாதியை அரிவாளால் வெட்டி படுகொலை செய்து விட்டு தப்பிய ராம்குமார் சிறையிலேயே மர்மமான முறையில் இறந்தார்.**

★ **காதலை ஏற்க மறுத்த விழுப்புரம் 12ஆம் வகுப்பு மாணவி நவீனா உயிரோடு எரிக்கப்பட்டார்.**

★ **கரூர் பொறியியல் கல்லூரியில் சோனாலியை, முன்னாள் மாணவன் உதயகுமார் வகுப்பறையில் நுழைந்து கட்டையால் அடித்துக் கொலை செய்தார்.**

★ **தூத்துக்குடியில் கிறிஸ்துவ ஆலயத்துக்குள் நுழைந்து ஃபிரான்ஸினா என்ற இளம் பள்ளி ஆசிரியை வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.**

★ **பேராசிரியை நிர்மலா தேவி, தன்னிடம் படிக்கும் மாணவிகளைப் பாலியல் பேரம் பேசும் ஆடியோ வெளியாகி, மாநிலமே அதிர்ந்தது.**

★ **தர்மபுரி இளவரசன் - திவ்யா காதல் கலப்புத் திருமணத்தின் கொடூரத் துயரங்களை மறக்க முடியுமா? இதற்கெல்லாம் பழனிசாமியால் பதில் சொல்ல முடியுமா?**

★ **தேசிய குற்ற பதிவேடு ஆவணக் காப்பகம் (என்.சி.ஆர்.பி.) வெளியிட்ட அறிக்கையின் படி இந்தியாவில் கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் 6ஆவது இடத்தை எட்டியதுதான் எடப்பாடி ஆட்சிக் காலம் ஆகும்.**

★ **கொலைகள் அதிகம் நடந்த மாநகரங்களில் நான்காவது இடத்தை சென்னை பெற்றது எடப்பாடி ஆட்சிக் காலம்.**

★ **இந்திய தண்டனைச் சட்டப்படியான குற்றங்களில் 6ஆவது இடத்தில் தமிழ்நாட்டைக் கொண்டு போய் நிறுத்தியவர் பழனிசாமி.**

★ **பொதுமக்கள் மீது சட்டவிரோதமாக கூடியதாக அதிகம் வழக்குப் போட்டதில் 4 ஆவது மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.**

★ **பட்டியல் மற்றும் பழங்குடியினர் கொலை அதிகம் நடக்கும் மாநிலப் பட்டியலில் 4ஆவது இடத்தில் தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.**

★ **பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறையில் 8ஆவது இடத்தில் தமிழ்நாட்டை நிறுத்தியவர் பழனிசாமி.**

★ **தற்கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டை 2ஆவது இடத்தில் நிறுத்தியது பழனிசாமி ஆட்சிக்காலம்.**

இவை எதையும் மக்களும் மறக்கவில்லை. அதற்கான ஆதாரங்களையும் அழிக்க முடியாது. தேர்தல் நேரத்தில் பத்துப் பேரைக் கூட்டி வைத்து ஆர்ப்பாட்டம் என்ற பெயரால் தனது இருப்பை பழனிசாமி காட்டிக் கொள்ள மட்டுமே அவதூறுகள் பயன்படும்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (19.3.2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் கிருஷ்ணகிரி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்த நேர்காணலில் கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார். இதில் கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (19.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், த.வெ.க. கட்சியைச் சார்ந்த நடிகை ரஞ்சனா நாச்சியார் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் தா.மோ. அன்பரசன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுச்சேரி மாநில தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் உடனிருந்தனர்.

சட்டமன்றத் தொகுதி – பகுதி வாரியாக

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சரிபார்க்கும் பணி!

தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 20-

சட்டமன்றத் தொகுதி - பகுதி வாரியாக வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு, முதல் நிலை பரிசோதனை குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கின் குறிப்பானை வருமாறு:-

சட்டமன்றத் தொகுதி / பகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு, முதல் நிலை பரிசோதனை நிறைவடைந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும் மாவட்டத் தேர்தல் அலுவலரால் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்தபடுகின்றன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் குறித்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பற்றிய நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் https://www.eci.gov.in/evmvvpat என்ற வலைதளத்தில்: இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டிற்கான வரவிருக்கும் பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்பட வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது:

மாவட்டத்தின் பெயர் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் நாள்

திருவள்ளூர் 23.03.2026 - சென்னை 23.03.2026, காஞ்சிபுரம் 23.03.2026, வேலூர் 23.03.2026, கிருஷ்ணகிரி 23.03.2026, தர்மபுரி 20.03.2026, திருவண்ணாமலை 23.03.2026, விழுப்புரம் 23.03.2026, சேலம் 24.03.2026, நாமக்கல் 23.03.2026, ஈரோடு 23.03.2026, நீலகிரி 23.03.2026, கோயம்புத்தூர் 23.03.2026, திண்டுக்கல் 23.03.2026 ,கரூர் 23.03.2026, திருச்சிராப்பள்ளி 23.03.2026, பெரம்பலூர் 23.03.2026, கடலூர் 23.03.2026, நாகப்பட்டினம் 23.03.2026 ,திருவாரூர் 23.03.2026, தஞ்சாவூர் 23.03.2026, புதுக்கோட்டை 24.03.2026, சிவகங்கை 23.03.2026, மதுரை 23.03.2026 ,தேனி 25.03.2026, விருதுநகர் 24.03.2026 ,இராமநாதபுரம் 23.03.2026, தூத்துக்குடி 23.03. 2026, திருநெல்வேலி 23.03. 2026,கன்னியாகுமரி 23. 03.2026, அரியலூர் 20.03. 2026, திருப்பூர் 23.03. 2026, கள்ளக்குறிச்சி 23. 03. 2026, தென்காசி 23. 03. 2026, செங்கல்பட்டு 23. 03.2026, திருப்பத்தூர் 23.03. 2026, இராணிப்பேட்டை 23.03. 2026, மயிலாடுத்துறை 23.03.2026,

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மேலாண்மை முறை (EMS) வாயிலாக சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் நிறைவடைந்த பின்னர், தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல்கள் மாவட்ட தலைமையிடங்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடன் பகிரப்படும். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள், தேர்தலில் பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்படும். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும், அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அந்தந்த சட்டமன்ற காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் பகிரப்படும்.

2. தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பாக பாதுகாப்பு படைகளின் பணியமர்த்தல் தொடங்கப்பட்டுள்ளது. மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்கனவே மத்திய ஆயுத பாதுகாப்புப் படையின் 50 கம்பெனிகளை 10.03.2026 அன்று அனுப்பியுள்ளது. தற்போது, மத்திய உள்துறை அமைச்சகம் கூடுதலாக மத்திய ஆயுத பாதுகாப்புப் படையின் 250 கம்பெனிகளை பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்காக நியமித்துள்ளது. அந்த கம்பெனிகள் 06.04.2026 மற்றும் 13.04.2026 அன்று தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவுள்ளது.

3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் கைபேசி செயலி பயன்படுத்துதல் பற்றிய பயிற்சி இந்திய தேர்தல் ஆணையம் மூலம் 19.03.2026 அன்று காணொலி வழியாக வழங்கப்பட்டது. இந்த கைபேசி செயலியின் மூலம், வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு நிலவரங்களை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பதிவு செய்வதற்கான வசதிகள் உள்ளது.

4. தேர்தல் நாளன்றும் மற்றும் தேர்தல் நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவும், எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது வேறு எந்த அமைப்போ அல்லது நபரோ, மாநில/மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் (MCMC) உள்ளடக்கத்தை முன்சான்றொப்பம் (Precertified) பெறாமல், அச்சு ஊடகங்களில் (Print Media) எந்தவொரு அரசியல் விளம்பரத்தையும் வெளியிடக்கூடாது என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள அச்சு ஊடகங்களில் வெளியிடப்படும் அரசியல் விளம்பரங்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள நாட்களுக்கு இந்த நடைமுறை பொருந்தும்:

தேர்தல் நாள் : 23.04.2026

தடை செய்யப்பட்ட நாட்கள் (தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு முந்தைய நாள்)

22.04.2026 & 23.04.2026

இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.